மண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, தாங்கள் கேள்வி நேரம் என்பதை எப்போதுமே மறந்து விடுகிறீர்கள். உட்காருங்கள். கேள்வி நேரத்தில் குறைகளைக் கூறக்கூடாது என்று விதி இருக்கிறது. உட்காருங்கள். திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : கடந்த ஐந்து ஆண்டுக் கால கட்டத்தில் எத்தனை வகையான நெல் ரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் அறிவித்தார்கள். ஆனால் அந்த வகைகள் எல்லாம் ஒன்று அல்லது இரண்டு தவிர, அதனுடைய காலத்திலோ, தண்ணீர் தேவையிலோ, வறட்சியைத் தாங்கக்கூடிய நிலையிலோ வித்தியாசம் இல்லாதவைகளாக இருக்கின்றன. நெல் விதை ஆராய்ச்சி மையத்திலிருந்து ஆண்டுதோறும் புதிய புதிய நெல் ரகங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் ஒரு நெல்லிற்கும், இன்னொரு நெல்லிற்கும் வித்தியாசம் இல்லாத வகையில் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே புதிய நெல் ரகங்களை அறிமுகப்படுத்துகின்றபோது, ஏற்கெனவே அறிமுகப் படுத்திய நெல் ரகத்திலிருந்து அதன் காலத்திலோ, தண்ணீர் தேவையிலோ அரிசியின் தரத்திலோ வேறுபாடு இருக்க வேண்டு மென்று அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் வெளியிடுகின்ற ஒவ்வொரு நெல் ரகத்திற்கும் அரிசியிலும் வேறுபாடு இருக்கிறது. நெல்லின் அளவிலும் வேறுபாடு இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒவ்வொரு பகுதியிலும் நல்லமுறையிலே விளைச்சலைத் தந்து கொண்டிருக்கிறது. தஞ்சையிலே விளையக்கூடிய நல்ல ரகமான நெல், கன்னியாகுமரி பகுதியிலே அங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதனால் அதிகமான மகசூலைத் தரமுடியாது. எனவே அந்த அந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டு வெளியிடப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 489, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

89— [1992 ஏப்ரல் 7

சத்துணவு ஊழியர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்வதைத் தடுத்தல்.

*1128 டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பல இடங்களில் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு ஆள்பிடிக்காத சத்துணவு ஊழியர்களை வேறு காரணங்களைக் காட்டி தற்காலிக வேலை நீக்கம் செய்வதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அப்படி தகவலேதுமில்லை. இதுமாதிரி குறிப்பான புகார்கள் தந்தால் விசாரிக்கப்படும்.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த ஊதியம் பெறும் சத்துணவு ஊழியர்களுக்குச் சில சமயங்களில் அதிக ஊக்கத் தொகை கொடுத்து, குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைக்கு ஆட்களை அழைத்துவர வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாக்கப் படுகிறார்கள். இதைத் தவிர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1–4–1991 அன்று நடந்த அரசுச் செயலாளர்கள் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டபடி நேர்முகக் கடித எண் 12738/91, நாள் 5–4–1991-ல் குடும்ப நலத் திட்டம் நல்லமுறையில் செயல்படுத்தப்பட சத்துணவு ஊழியர்கள் அந்தக் கூடங்களுக்கு வருகின்ற தாய்மார்களுக்கு இதுபற்றிப் பிரச்சாரம் செய்வதற்குரிய சேவையை மட்டும் பயன் படுத்திக் கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால், சத்துணவு ஊழியர்கள் குடும்ப நலத் திட்டத்திற்காக கட்டாயப் படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்களைக் கட்டாயப்படுத்த வில்லை என்று கூறினார்கள். ஆனால், அரசு அதிகாரிகள் அவர்களை ஒருசில முறையில் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைக்கு ஆட்களை கொண்டுவர வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆகவே, அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 7]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட அரசு அதிகாரிகளுடைய பெயர்களையும், அப்படி நடக்கின்ற இடங்களையும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் பொதுவாக எல்லா பி.டி.ஓ-க்களும் இன்று அறுவை சிகிச்சைக்கு ஆள்பிடிக்காதவர்களை எல்லாம் வேறு காரணங்களைக் காட்டி சத்துணவு ஊழியர்கள் பேரவையின் தலைவரையே தர்மபுரி மாவட்டத்தில் வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். இதுபோன்ற நிலையைத் தவிர்க்க வேண்டும் என்று சொன்னால் இவர்கள் பி.டி.ஓ.-க்களுக்கு இலக்கு நிர்ணயிப்பதைவிட, ஹெல்த் டிபார்ட்மெண்ட்டுக்கு அந்த மாதிரி வேலையைச் செய்ய முழுமையாக ஒப்படைத்துவிடத் தயாராக இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்களின் சங்கத் தலைவராக மாண்புமிகு உறுப்பினர் இருக்கின்ற காரணத்தால் தவறான தகவலை அரசுக்குச் சொல்லக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றவுடன் சத்துணவு நலப் பணியாளர்களை எந்தவிதக் காரணத்தைக் கொண்டும் குடும்ப நலத் திட்டத்திற்காகக் கட்டாயப்படுத்தக் கூடாது என்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, அவர்களை வேலை நீக்கம் செய்வதற்கான காரணங்கள்—இப்படிப்பட்ட காரணங்கள் எந்த மாவட்டங்களிலிருந்தும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பி.டி.ஓ.-க்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறான தகவல் நீங்கள் கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்து திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நடைபெறுகிற சத்துணவுத் திட்டம் போல் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்

[1992 ஏப்ரல் 7

கொண்டு வந்த சத்துணவுத் திட்டம் போல் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி சத்துணவுப் பணியாளர்களுக்கு வேறு அலுவல்கள் கொடுக்கிறார்கள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பது பற்றியது எனவே இதற்குத் தனிக் கேள்வி போடவும். திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு என்னுடைய தொகுதியிலிருந்து கடிதம் வந்து இருக்கிறது. இந்த மாதிரி பி.டி.ஓ.-க்கள் எல்லாம் அதிகமாகத் தொந்தரவு செய்கிறார்கள் ஆகவே உரிய நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லி. ஆகவே அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குத் தகவல் கொடுத்து இப்படிப்பட்ட பணியாளர்கள் இவ்விதமான தொந்தரவுகளுக்கு ஆளாக்கப்படக்கூடாது என்று அறிவுறுத்த முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு எந்த இடத்தில் இப்படி நடைபெற்றது, எந்த அரசு அதிகாரி இப்படிச் செய்தார் என்று குறிப்பிட்டு என்னிடத்தில் புகாராகக் கொடுத்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர் செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் சத்துணவுக் கூடத்திற்கு எந்த ஆண்டில் இருந்து எந்தெந்த விகிதத்தின் கீழ் காய்கறிகள் கொடுக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, பணியாளர்கள் பற்றியது. எனவே இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 490—திரு. பி. வி. இராஜேந்திரன், திரு. ஆர் சிங்காரம், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS